**சுருக்கம்**

மீன்துறை – திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு ஏரியில் கடந்த 12.4.2014 அன்று மீன்பிடித்தலின் போது தகராறு காரணமாக மீன்பிடி கலன்கள், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் மீன்பிடி படகு இயந்திரம் சேதமேற்பட்டது – பாதிக்கப்பட்ட சின்னமாங்கோடு மீனவர்களுக்கு சேத நிவாரணத் தொகை ரூ.54.636 இலட்சம் நிதி ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வள(மீன்–3)த் துறை

அரசாணை(நிலை)எண்.25 நாள்.18.2.2016

திருவள்ளுவர் ஆண்டு – 2047
மாசி மாதம் 6 –ஆம் நாள்

படிக்கப்பட்டது:

1. மீன்துறை ஆணையரின் கடித ந.க.எண்.7279/ஜே5/2014, நாள்.3.7.2014
2. மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களின் கடித ந.க.எண்.7892/2014/எம்1, நாள்.14.7.2014

–––––

**ஆணை**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், பழவேற்காடு ஏரியைச் சார்ந்து மீன்பிடிப்பில் உள்ள தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநில மீனவர்கள் மூன்று பிரிவுகளாக பிரிந்து நடைமுறையில் உள்ள பாடு மீன்பிடிப்பு முறைமையினை மீறியதன் காரணமாக மீனவ கிராமங்களிடையே மோதல் ஏற்பட்டதாகவும் இதனைத் தொடர்ந்து மூன்று பிரிவினருக்குமிடையே மீன்பிடிப்பில் கருத்தொற்றுமை ஏற்படுத்தும் வண்ணம் 28.12.2013 அன்று முதல் கட்ட சமாதான பேச்சுவார்த்தையும், 06.02.2014 அன்று இரண்டாம் கட்ட சமாதான பேச்சுவார்த்தையும் நடைபெற்றதாகவும், இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சின் போது மூன்று பிரிவு சங்க மீனவர்களும் தத்தமது எல்லைக்குட்பட்ட பகுதியில் மீன்பிடிக்க வேண்டும் என தெரிவித்து சமாதான கூட்டத்தில் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளதாகவும், மீன்துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. இந்நிலையில், 08.04.2014 அன்று பழவேற்காடு ஏரியில் மீன்பிடிப்பில் ஈடுபட்ட நொச்சிக்குப்பம் பகுதியைச் சார்ந்த மீனவர்கள் பாடு முறைமையினை மீறி பெரியமாங்கோடு பகுதியில் மீன்பிடிப்பில் ஈடுபட்டு வந்ததால் அம்மீன்பிடிப்பினை தடுக்க பெரியமாங்கோடு பகுதி மீனவர்கள் முயன்றபோது ஏற்பட்ட தகராறில் நொச்சிக்குப்பம் மீனவர் கூட்டுறவு சங்க மீனவர்கள் தாக்கப்பட்டதாகவும், காயம் அடைந்த 9 மீனவர்கள் அளித்த புகாரின் பேரில் ஆரம்பாக்கம் காவல்நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டு விசாரணை நடைபெற்று வருவதாக மீன்துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

(த.பி.பா)

3. பாடு பிரித்தலில் ஆரம்பாக்கம் – நொச்சிக்குப்பம் மற்றும் சின்ன மாங்கோடு மீனவர்களுக்கிடையே நடைபெற்ற தகராறின் பின்னணியில், 12.04.2014 அன்று நொச்சிக்குப்பம் மற்றும் அதன் அண்மைக் கிராமங்களைச் சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்படும் ஒரு கும்பல் சின்னமாங்கோடு மீனவர் கிராமத்திற்குள் புகுந்து வீடுகள், வாகனங்கள் மற்றும் மீன்பிடி கலன்கள் / உபகரணங்களுக்கு தீ வைத்து சேதப்படுத்தியுள்ளதாகவும், தகவல் அறிந்து வருவாய்த்துறை மற்றும் மீன்வளத்துறை அலுவலர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று நிலைமையினை ஆய்வு செய்ததாகவும், மேலும் மீன்துறை உதவி இயக்குநர் தலைமையிலான குழு மீன்பிடி கலன்கள் மற்றும் உபகரணங்களுக்கு ஏற்பட்ட சேதத்தினை மதிப்பீடு செய்து சேத மதிப்பீட்டு அறிக்கையினை சமர்ப்பித்துள்ளது என்றும், அதனில் சின்னமாங்கோடு கிராம மீனவர்களின் மீன்பிடி கலன்கள் / உபகரணங்களுக்கு ஏற்பட்ட சேத அளவை கீழ்க்கண்டவாறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும் மீன்துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

| வ. எண். | சேதமுற்ற இனங்கள் | | சேத மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | மீன்பிடி கலன்கள் | – | 22.145 |
| 2. | மீன்பிடி உபகரணங்கள் | – | 16.541 |
| 3. | மீன்பிடி இயந்திர படகு | – | 15.950 |
| | மொத்தம் | – | 54.636 |

எனவே, மேற்காணும் தகராறின் போது மீன்பிடி உடைமை சேதமடைந்த நிலையில் தங்களது வாழ்வாதாரத்தினை இழந்து நிற்கும் இம்மீனவர்களின் துயரினைப் போக்கிட ஏதுவாக ரூ.54.636 இலட்சம் நிவாரணம் வழங்கிட மீன்துறை ஆணையர் அவர்கள் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. வருவாய் கோட்ட அலுவலர் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர் பொன்னேரி ஆகியோர்களின் அறிக்கையின் அடிப்படையில் மேற்காணும் கருத்துருவை மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம் அவர்கள் சேதமுற்ற மீன்பிடி கலன், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் மீன்பிடி படகு இயந்திரங்களுக்கு ஒரு சிறப்பினமாக கருதி நிவாரணம் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

5. மேலே பத்தி மூன்று மற்றும் நான்கில் உள்ள மீன்துறை ஆணையரின் கருத்துரு மற்றும் மாவட்ட ஆட்சியர் திருவள்ளூர் அவர்களின் பரிந்துரையை அரசு கவனமுடன் பரிசீலித்து மீன்வர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டதை கருத்தில் கொண்டு இக்கருத்துருவை சிறப்பினமாகக் கருதி ஏற்கலாம் என முடிவு செய்துள்ளது. எனவே, திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு ஏரியில் கடந்த 12.4.2014 அன்று மீனவர்களுக்கிடையே நிகழ்ந்த தகராறு காரணமாக ஏற்பட்ட சேதத்தினால் பாதிக்கப்பட்ட சின்னமாங்கோடு மீனவர்களுக்கு சேத நிவாரணத் தொகையான ரூ.54.636 இலட்சம் (ரூபாய் ஐம்பத்து நான்கு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து அறுநூறு மட்டும்) ((i) மீன்பிடி கலன் – ரூ.22.145 இலட்சம், (ii) மீன்பிடி உபகரணங்கள் ரூ.16.541 இலட்சம், (iii) மீன்பிடி படகு இயந்திரம் ரூ.15.950 இலட்சம்)) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி ஐந்தில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கோரிக்கை எண்.07 துறை குறியீடு 01–இல் தோற்றுவிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

2405–00–மீனளம் 800–ஏனைய செலவு–I.திட்டத்தில் சேராதது–BL–
மீனவர்களிடையே ஏற்படும் தகராறுகளுக்கு நிவாரண உதவி–09.
மானியங்கள்–03.குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை
(த.தொ.கு:2405–00–800–BL 0937)

7. மேலே பத்தி ஐந்தில் ஒப்பளிக்கப்பட்ட தொகையை பெற்று வழங்க மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. இத்தொகையை பயனாளிகளுக்கு வழங்கிய பின்னர் உரிய பயனிட்டுச் சான்றிதழை அரசுக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார். மீன்துறை ஆணையர் மேற்காணும் நிகழ்வை கண்காணிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி ஐந்தில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு ''புதுப்பணி'' குறித்ததாகும். இதற்கான ஒப்புதலை சட்டமன்ற பேரவையில் உரிய காலத்தில் பெறப்பட வேண்டும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும் வரை அத்தகைய நிதியொதுக்கத்தை எதிர்நோக்கி எதிர்பாரா செலவு நிதியில் இருந்து முன்பணமாக பெற்று இச்செலவினத்தை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்களுக்கு அரசு அனுமதி வழங்குகிறது. மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்கள் அரசின் நிதி(காப(ம)மீ/வ.செ.பொ–1)த் துறைக்கு எதிர்பாரா செலவு நிதியில் இருந்து முன்பணமாக பெற உரிய படிவத்தில் அரசாணையின் நகலோடு உரிய காலத்தில் விண்ணப்பிக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்கள் வரைவு விளக்க குறிப்பினை துணை மதிப்பீடுகள் 2015–2016–இல் தவறாது சேர்த்திடும் வகையில் உரிய கருத்துருவினை அரசின் நிதித்துறைக்கு உரிய காலத்தில் அனுப்பிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. ஆணையர், மீன்துறை மேற்காணும் புதிய கணக்குத் தலைப்பின் மதிப்பீடு கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுபாடு அதிகாரி ஆவார்.

10. மேற்காணும் புதிய கணக்குத் தலைப்பினை உரிய கருவூல கணக்கு அதிகாரிகள் தொடங்கிட அறிவுறுத்தப்படுகிறார்கள்.

11. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.12609/நிதி(காப(ம)மீ/16, நாள்.18.2.2016–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.2480 (இரண்டாயிரத்து நானூற்று எண்பது)

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.விஜயகுமார்
அரசு செயலாளர்

பெறுநர்
மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம்
மீன்துறை ஆணையர், சென்னை–6
மாவட்ட கருவூலம், திருவள்ளூர்
மாநில கணக்காயர், சென்னை –18/18(பெயரில்)
நகல்
நிதி(நிதி(காப(ம)மீ/வ.செ.பொ–1)த் துறை, சென்னை–9
மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்